செ.வெ.எண்:120 **பெரம்பலூர் மாவட்டம்** நாள்: 04.02.2010

## பெரம்பலூரில் நடைபெற்ற அரசு விழாவில் 15366 பயனாளிகளுக்கு ரூ. 16.40 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்—மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாக திடலில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (4.2.2010) கலந்துகொண்டு பல்வேறு துறைகளின் சார்பில் 15366 பயனாளிகளுக்கு ரூ. 16.40 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி ரூ. 112.25 கோடி மதிப்பில் 17 பணிகளுக்கான அடிக்கல் நாட்டி, ரூ. 23.23 கோடி மதிப்பில் 115 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

இவ்விழாவில் கலந்துகொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது,"இவ்விழாவில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ. 2 கோடியே 59 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் அயன்பேரையூர் ஊராட்சியில் சமத்துவபுரம் மற்றும் பள்ளிக்கட்டிடம் உள்ளிட்ட 2 பணிகளுக்கும், நகராட்சி நிர்வாகத் துறையின் சார்பில் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில், தார்சாலை மற்றும் சிமெண்ட்சாலை அமைக்கும் 3 பணிகளும், பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ. 97 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் குன்னத்தில் அரசு மருத்துவக்கல்லூரி கட்டிடம் உள்ளிட்ட 3 பணிகளும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ. 55 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் 2 பணிகளும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூ. 1 கோடியே 1 லட்சம் மதிப்பீட்டில் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கும், தொழில்நுட்ப கல்வித்துறையின் சார்பில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் வேலூர் கிராமத்தில் புதிய பல்தொழில்நுட்ப பயிலக கல்லூரி கட்டுமானப்பணிக்கும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவுத்துறை அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கும், கல்வித்துறை மற்றும் வனத்துறை சார்பில் ரூ. 49 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டிடம் மற்றும் வன ஓய்வு விடுதி கட்டிடம் உள்ளிட்ட 4 பணிகளுக்கும் என ரூ. 112 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 பணிகளுக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ. 3 கோடியே 61 லட்சம் மதிப்பீட்டில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரை ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திலான பணிகள் உள்ளிட்ட 24 பணிகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் சுமார் ரூ. 1 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் 59 குடிநீர் திட்டப்பணிகளும், பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ. 6 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் வேப்பூரில் அரசு மருத்துவமனை கட்டிடம், வகுப்பறை, ஆய்வகம் உள்ளிட்ட 11 பணிகளுக்கும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ. 9 கோடியே 83 லட்சம் மதிப்பீட்டில் பாலங்கள் அமைக்கும் 14 பணிகளும், பேரூராட்சிகள், நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் தாட்கோ நிறுவனத்தின் சார்பில் ரூ. 79 லட்சம் மதிப்பீட்டில் 6 பணிகளும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் ரூ. 69 லட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கும் என ரூ. 23 கோடியே 22 லட்சம் மதிப்பீட்டில் 15 பணிகள் இன்றையதினம் மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், இந்த விழாவின்மூலம் 1000 மகளிர் சுயஉதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அரசு மானியம் தலா ரூ. 10 ஆயிரம் மற்றும் வங்கிக்கடனாக ரூ. 10 கோடியே 41 லட்சம் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதுமட்டுமன்றி, வருவாய்த்துறையின் சார்பில் ரூ. 2 கோடியே 71 லட்சம் மதிப்பீட்டில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள், இலவச மனைப்பட்டா உள்ளிட்ட 2107 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கூட்டுறவுத்துறை சார்பில் ரூ. 37 லட்சம் மதிப்பீட்டில் 453 பயனாளிகளுக்கு பொருளாதாரக்கடன், மத்திய கால கடன் வழங்கியும், என ரூ. 15 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் 3 ஆயிரத்து 62 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் இன்றையதினம் வழங்கப்படுகின்றன. ஆக மொத்தம் இன்றைதின விழாவின்மூலம் சுமார் ரூ. 180 கோடியே 97 லட்சம் மதிப்பீட்டிலான அடிக்கல் நாட்டும் பணிகள், திறப்புவிழா பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 12620 கிராம ஊராட்சிகளில் சுமார் ரூ. 2536 கோடி செலவில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டது. ஊராட்சிக்கு தலா 20 லட்சம் நிதி வழங்கப்படுகிறது. மாநில அளவில் நான்கு ஆண்டுகளில் 10104 ஊராட்சிகளுக்கு ரூ. 2020.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட அளவில் 4 ஆண்டுகளில் 1725 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1601 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 121 பணிகளும் விரைவில் நிறைவுபெறும். தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகளிலும், சுமார் ரூ. 280 கோடி செலவில், இத்திட்டத்தை 4 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு தலா ரூ. 50 லட்சம் நிதி வழங்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் நாட்டிலேயே இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும், இதற்காக மத்திய அரசும், மத்திய திட்டக்குழுவும் தமிழக அரசை பாராட்டியுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இதுவரை ரூ. 2939 கோடியே 19 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ. 36 கோடியே 73 லட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 36 ஆயிரத்து 153 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை ரூ. 19 கோடியே 47 லட்சம் செலவிடப்பட்டு, 24 இலட்சத்து 30 ஆயிரம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 374 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 5வது கட்டமாக இதுவரை வழங்கப்படாத அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் டிசம்பர் இறுதிக்குள் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கப்பட்டுவிடும். பெரம்பலூர் மாவட்டத்தில், சிறப்பு பொருளாதார மண்டலம் 3072 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது, இதற்காக தற்பொழுது 2893 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது, விரைவில் மீதமுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கப்படும். மேலும், நாரணமங்கலம் அருகே 3000 ஏக்கர் பரப்பளவில் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.எப் டயர் தொழிற்சாலைக்கான பணிகள் நடைபெற்றுவருவதால், 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது," என்று தெரிவித்தார்.

பின்னர், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரை ஊராட்சியில் ரூ.2 கோடியே 37 லட்சத்து 43 ஆயிரத்து இருநூறு மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.